செ.வெ.எண்: 08 நாள்:04.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் 75000 அகத்திக்கன்றுகள் வளர்க்கப்படவுள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் புதுவாழ்வு திட்டத்தின் 18வது செயற்குழுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (04.01.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி கூறியதாவது:

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் விலையில்லா வெள்ளாடு மற்றும் கறவை மாடு திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளுக்கு தமிழ்நாடு முழுவதும் 20 இலட்சம் அகத்திக்கன்றுகள் வழங்கி வளர்க்கும் திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் செயல்படும் ஊராட்சிகளில் உள்ள மகளிர் குழு மற்றும் ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு 74805 அகத்திக்கன்றுகள் வழங்க தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து இக்குழு உறுப்பினர்களுக்கு அகத்திக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி பெரியதம்பி உடையான்பட்டியை சேர்ந்த மலைமாதா கறவை மாடு ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு 20000 அகத்திக்கன்றுகளும், மழையூர் செம்பருத்தி மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு 15000 அகத்திக்கன்றுகளும், நெப்புகை புகழ் நர்சரி ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு 20000 அகத்திக்கன்றுகளும், கீராத்தூர் புதுவாழ்வு மாடு வளர்ப்பு ஒத்த தொழில் குழு உறுப்பினர்களுக்கு 20000 அகத்திக்கன்றுகளும் என மொத்தம் 75000 அகத்திக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அகத்திக்கன்று ஒன்றிற்கு முதல் தவணையாக ரூ.4 வீதம் மொத்தம் ரூ.299220 மதிப்பில் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்தொகை பாலித்தீன் கவர், விதை மற்றும் எரு போன்றவை வாங்குவதற்காக 50 சதவீதம் நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் இந்த அகத்திக்கன்றுகளை 60 நாட்களில் வளர்த்து பின்னர் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் அவர்களிடம் ஒப்படைத்தவுடன் மீதமுள்ள 50 சதவீதம் நிதியுதவித்தொகைக்கான காசோலைகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும். எனவே தமிழகஅரசின் இத்தகைய திட்டத்தினை பயனாளிகள் உரிய முறையில் பெற்று பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் திட்ட இயக்குநர் (மா.ஊ.வ.மு.) திரு.சந்தோஷ்குமார், மாவட்ட திட்ட மேலாளர் (புதுவாழ்வு திட்டம்) திருமதி.வசுமதி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.சோமசுந்தரம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**